### மாநில உரிமைகளைக் காப்பதன் மூலம்

# இந்திய ஜனநாயகத்தைக் காக்கும் காவலராகத் திகழ்கிறார் நம் முதல்வர்!

## சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் இ.பரந்தாமன் பேச்சு!

**சென்னை, ஜன.24 - கழகத் தலைவர் முதல்வரின் திராவிட மாடல் ஆட்சியில் சமூகநலத் திட்டங்களால் பயன்பெறாத குடும்பம் என்ற ஒன்று இருக்க முடியுமா என்று பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதத்தை முன்மொழிந்து எழும்பூர் இ.பரந்தாமன் பேசுகையில் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் எழும்பூர் இ.பரந்தாமன் முன்மொழிந்து பேசியதாவது:-

பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு அரசால் ஆளுநர் அவர்களுக்கு வழக்கமான வழிமுறைகளைப் பின்பற்றி அனுப்பி வைக்கப்பட்டு, அச்சிடப்பட்டு, அவையின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட ஆளுநர் உரையைப் படிக்காமல், ஆளுநர் அவர்கள் சென்றமைக்கு இப்பேரவை தனது வருத்தத்தை பதிவு செய்கிறது.

2026-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 20 ஆம் நாளன்று பேரவையில் பதிவு செய்யப்பட்ட ஆளுநர் அவர்களின் பேருரைக்கு இப்பேரவை உறுப்பினர்கள் நன்றியுடையவர்களாவர். என்னும் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் என்று இ.பரந்தாமன் முன்மொழிந்தார்.

**பேரவைத் தலைவர்:** தீர்மானத்தை வழிமொழிதல். உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்கள்.

**முனைவர் த.இனிகோ இருதயராஜ் :** உறுப்பினர் இ. பரந்தாமன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

**பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெறவிருக்கிறது. எட்டு மாமன்ற உறுப்பினர்கள் பேசவிருக்கின்றார்கள். முதல் இரண்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு தலா பத்து நிமிடங்களும், மீதி வருகின்ற ஆறு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தலா எட்டு நிமிடங்க ளும் வழங்கப்படவிருக்கின்றது. ஆகவே பேச வருகின்ற உறுப்பினர்கள் குறித்த நேரத்திற்குள் தங்களுடைய உரையை நிறைவு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டு, நம்முடைய உறுப்பினர். இ.பரந்தாமன் அவர்களை விவாதத்தை தொடங்கிவைக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**இ. பரந்தாமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றிகரமான ஐந்தாண்டு கால திராவிட மாடல் ஆட்சி. அடுத்த ஐந்தாண்டு காலமும் அதன் பிறகும் தொடரப்போகும் வரலாற்று தருணத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) ஆளுநர் அவர்களின் உரை குறித்து உரையாற்றும் வாய்ப்பை எனக்கு வழங்கிய இந்திய ஜனநாயகத்தின் காவலராகவும், தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளை காக்கும் பேர்வீரராகவும் திகழும், சாதனைகளால் சாதனை படைத்துவரும் திராவிட நாயகர் எங்கள் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், ஒப்பாரும் மிக்காரும் இல்லா இந்த நல்லாட்சிக்கு உறுதுணையாக நின்று செயலாற்றிவரும் எங்கள் இளந்தலைவர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வுரையாற்றுவதற்கு நேரம் வழங்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் ஆற்றும் உரைக்கு பெயர் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். இதில் வேடிக்கை என்னவென்றால் ஆற்றாத உரைக்கு நன்றி தெரிவிப்பது. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் இந்த தீர்மானத்தை நான் முன்மொழி யும்போது பதிவு செய்யப்பட்ட உரை என்றே குறிப்பிட்டிருக்கிறேன். தேசிய கீதம் இசைக்க வேண்டுமென்று கேட்பதல்ல தேசபக்தி. தேசிய கீதம் இசைக்கும்போது இங்கு இருந்திருக்க வேண்டும். இந்த அவைக்கும் தமிழ்நாட்டிற்கும் யாரும் தேசபக்தியை சொல்லிக்கொடுக்க வேண்டிய இடத்தில் நாம் இல்லை. சிப்பாய் கழகத்திற்கு முன்பே வேலூர் புரட்சி செய்த மண் தமிழ்நாடு. சட்டமன்றம் என்பது மக்கள் பிரதிநிதிகளின் மன்றம். இங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கும் மட்டும் தான் அதிகாரமே தவிர நியமனப் பதவிகளுக்கு மக்களாட்சியில் அதிகாரம் கிடையாது.

நியமனப் பதவியில் இருப்பவர்கள், அரசியலமைப்புச் சட்டம் அவர்களுக்கு வழங்கியிருக்கிற வேலையை மட்டும் பார்க்க வேண்டும். அதன் வரம்பை மீறி செயல்படுவது மக்களாட்சிக்கு எதிரானது என்ற அடிப்படையில், முதலமைச்சர் அவர்கள் ஆண்டு தொடக்கத்தில் ஆளுநர் உரை என்கின்ற முறையையே மாற்ற வேண்டுமென்ற சிறப்புமிக்க தீர்மானத்தை முன்மொழிந்து அதற்குரிய சட்ட வழிமுறைகளை மேற்கொள்வோம் என்று தெரிவித்திருப்பது இந்திய ஜனநாயகத்தின் விழுமியங்களை பாதுகாக்கக்கூடிய ஒப்பற்ற தலைவராக அவர் இருக்கிறார் என்பதை காட்டுகிறது.

ஆளுநருக்கு துணையாக வெளிநடப்பு செய்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் குறித்து பத்திரிகையாளர் கேட்ட கேள்விக்கு முதல்வர் அவர்கள் தன்னை 'Super Chief Minister in India' என முன்னிறுத்திக்கொள்ள பார்க்கிறார் என்று பதிலளித்திருக்கிறார். நான் அவருக்கும் சொல்வேன், அவருக்கு முன்னதாக இந்த அவையில் நடைபயிற்சி மேற்கொண்ட ஆளுநருக்கும் சொல்வேன் எங்கள் முதல்வர் 'Super Chief Minister' அல்ல 'Supreme Chief Minister'. (மேசையைத் தட்டும் ஒலி)

The Economic Times நாளேடு தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் குறிப்பிட்டு தமிழ்நாட்டிற்கு 'Super Star State' என்ற விருதினை வழங்கியிருக்கிறது. CVoter நிறுவனத்தின் நிறுவன இயக்குநர் யஷ்வந் தேஷ்முக் அவர்களும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் தொடர்ச்சியாக ஐந்து top முதலமைச்சரின் பட்டியலில் இருந்து வருகிறார். இப்படி தொடர்ச்சியாக இருந்து வருவது அசாதாரணமானது என்று குறிப்பிடுகிறார். எனவேதான் நாங்கள் மீண்டும் சொல்கிறோம் எங்கள் Chief Minister 'Supreme Chief Minister' தான்; எவரிடமும் நம் முதல்வர் குனிந்து, தவழ்ந்து செல்வதில்லை. ஏன் யாரையும் சந்திக்க கைக்குட்டையைக் கொண்டு முகத்தை மூடிக்கொண்டு செல்வதில்லை. மாநில உரிமைகள் பாதுகாக்கப்பட்டால்தான் இந்திய ஜனநாயகத்தின் முதுகெலும்பு உறுதியாக இருக்கும் என்பதால் நம் முதல்வர் அவர்கள் நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையுமாக உரிமைப் போராட்டத்தை நடத்தி வருகிறார்.



### தி.மு.க. ஆட்சியை இந்தியாவே திரும்பி பார்க்கும்!

எப்போதெல்லாம் திராவிடம் தமிழ்நாட்டை ஆளுகிறதோ அப்போதெல்லாம் இந்தியாவே திரும்பிப் பார்க்கும். இதுதான் இந்த மண்ணின் வரலாறு; பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் 1920-ஆம் ஆண்டு அப்போது இந்தியாவிலிருந்த மாகாணங்களுக்கு தேர்தல் நடத்தப்பட்டது. பம்பாய் மாகாணம், கல்கத்தா மாகாணம், மத்திய மாகாணம், ஐக்கிய மாகாணம் போன்ற மாகாணங்களில் நடந்த தேர்தலில் அரசியல் கட்சிகள் பங்கேற்கவில்லை. ஆனால், அன்றைய சென்னை மாகாணமான நம்முடைய மாநிலத்தில் நீதிக்கட்சி என்கின்ற திராவிட அரசியல் இயக்கம் தேர்தல் களம் கண்டது, வென்றது, ஆட்சி அமைத்தது. மற்ற மாகாணங்களில் அதனதன் Governorகள் ஆட்சி செய்தனர்.

நம்முடைய சென்னை மாகாணத்தில் Governorஐவிட மக்களின் அரசுதான் முதன்மையானது என்று சொல்லக்கூடிய வகையிலே திராவிட இயக்கமான நீதிக் கட்சியின் ஆட்சி அமைந்தது. அந்த நூற்றாண்டு பாரம்பரியமிக்க பெருமிதத்துடன் சுதந்திர இந்திய ஜனநாயக நாட்டில் ஆளுநர்கள் கையில் மாநில அரசுகளின் அதிகாரம் சென்றுவிடாமல் மக்கள் ஆட்சியின் நாயகராக மிகச் சிறந்த நிருவாகத்தை வழங்கி வருகிறார் நம் முதல்வர் அவர்கள்.

தமிழ்நாட்டின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை வாய்விட்டுப் படிக்க RSS model ஆளுநர் அவர்கள் வெட்கப்பட்டு, வெளியேறி Lok Bhavanலிருந்து ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். அது Lok Bhavan அல்ல 'Local Bhavan' என்பதற்கான சான்றுதான் அந்த வெற்று அறிக்கை. அதில் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு நான்காவது இடத்தில் இருப்பதாகவும், இன்று வெளிநாடு முதலீடுகளைப் பெறுவதில் தமிழ்நாடு தத்தளிப்பதாகவும் அதுவும் ஆறாவது இடத்திற்கு தள்ளப்பட்டு விட்டதாக Lok Bhavan புள்ளி புலம்பியிருக்கிறார். அவரின் எஜமான் கட்சி ஆட்சி செய்யும் ஒன்றிய அரசின் துறையான Department for Promotion of Industry and Internal Trade (DPIIT) தனது சமீபத்திய அறிக்கையில் "In the financial year 2026, FDI equity inflow to Tamil Nadu stood at 3.5 Billion US Dollars for April to September, the 3rd highest among the States. என குறிப்பிட்டுள்ளதை Lok Bhavan புள்ளி படிக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

### பொருளாதார வளர்ச்சி!

கடந்த நிதியாண்டில் தமிழ்நாடு 11.19 சதவிகிதம் என்ற உயரிய பொருளாதார வளர்ச்சியை எட்டியுள்ளது. இது கடந்த 14 ஆண்டுகளில் தமிழ்நாடு கண்டிராத வளர்ச்சியாகும். 2021-2022-ஆம் ஆண்டில் 2.9 கோடி பேருக்கு வேலைவாய்ப்புகள் இருந்த நிலையில், 2024-2025-ஆம் ஆண்டில் வேலைவாய்ப்புகள் 3.87 கோடியாக அதிகரித்துள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் தொழிலாளர் நலத் துறையின்மூலம் நடத்தப்பட்ட 2,437 வேலைவாய்ப்புகள் முகாம்களில் மூன்று இலட்சத்திற்கும் மேலான இளைஞர்கள் தனியார் துறை நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

தொழில் துறையில் கடந்த 5 ஆண்டுகளில் ஏறத்தாழ 12.16 இலட்சம் கோடி ரூபாய்க்கும் மேலாக முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, பல்வேறு முன்னணி நிறுவனங்களோடு 1,176 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. இதனால் சுமார் 36 இலட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் சாதகமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. சமூக நீதியை அடிப்படையாகக் கொண்ட திராவிட மாடல் அரசின் சமூக, பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை ஆய்வு செய்துள்ள உலக வங்கி இந்தியாவின் வளர்ச்சிக்கு இந்த திராவிட மாடல் ஒரு முன் மாதிரியாக அமையலாம் என பரிந்துரைத்திருக்கிறது.

ஒன்றிய அரசின் NITI Aayog அமைப்பு 2023-2024 ஆம் ஆண்டிற்கான நீடித்த நிலையான வளர்ச்சிக் குறியீடுகள் குறித்த நான்காவது ஆய்வறிக்கை 20, 24 ஆம் தேதி ஆகஸ்ட் மாதத்தில் வெளியிட்டது. அந்த அறிக்கையில் வறுமை ஒழிப்பு, காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் பராமரிப்பு ஆகியவற்றில் தமிழ்நாடு சிறப்பாகச் செயலாற்றி தேசிய அளவில் முதல் மாநிலமாக உயர்ந்துள்ளது என்றும், பசிப்பிணி அகற்றல், பொருளாதாரம் மற்றும் சிறந்த வேலைவாய்ப்பு, தரமான கல்வி, மக்கள் நலம் மற்றும் சுகாதார வாழ்வு, தொழில் வளர்ச்சி, புத்தாக்க தொழில் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள், தூய்மையான குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றுதல், சமத்துவயின்மையைக் குறைத்தல், உற்பத்தி மற்றும் நுகர்வு, அமைதியைக் காத்தல், நீதி நிருவாகம், வலுவான நிறுவனங்கள், பாலின சமத்துவம் ஆகிய இனங்களில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக உயர்ந்து சிறந்துள்ளது என்று பாராட்டியுள்ளது.

இந்திய ரிசர்வ் வங்கி தனது 2023-2024-ஆம் ஆண்டிற்கான வளர்ச்சி குறித்த ஆய்வேட்டில் மனித வளங்களை வளர்ப்பதில் மகாராஷ்டிரா, குஜராத் மாநிலங்களை விட தமிழ்நாடு முன்னேற்றம் கண்டு, இந்தியாவில் முதலிடம் பெற்று, சாதனை படைத்துள்ளதாக பாராட்டியுள்ளது.

அமெரிக்க செய்தி நிறுவனமான 'The New York Times' நாளிதழ் தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் champion ஆக இருப்பதாக பாராட்டி, கட்டுரை வெளியிட்டிருக்கிறது. புத்தாக்க நிறுவனங்கள் மூலமாக தமிழ்நாடு அரசு best performance செய்வதாக Times of India ஆங்கில நாளிதழ் குறிப்பிட்டு, பாராட்டியிருக்கிறது.

தமிழ்நாடு அரசு முதலீட்டாளர்கள் மாநாட்டை சிறப்பாக நடத்தி வருகிறது என தினமணி நாளிதழ் தலையங்கம் எழுதியிருக்கிறது. அனைத்திற்கும் மேலாக ஐந்தாண்டு கால கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடந்துவரும் திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் 1 இலட்சத்து 91 ஆயிரத்து 309 ஆக அதிகரித்து, தேசிய அளவில் தனிநபர் வருமானத்தில் தமிழ்நாடு இரண்டாவது இடத்திற்கு உயர்ந்திருக்கிறது.

விஞ்ஞானத்தின் பாதை ராஜபாட்டை அல்ல என்பார்கள். அதே போல் தான் அரசியல் பாதையும். அதனால் தான் கழகத் தலைவர் அவர்கள், அவதூறு பரப்புவோர்மீது அக்கறை கொள்ளாமல் தமிழ்நாட்டு மக்களின் எதிர்கால நலன் பற்றி மட்டுமே அக்கறை கொண்டு செயலாற்றி வருகிறார். 2030-ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாடு அடைய வேண்டிய பரவலான வளர்ச்சி மற்றும் உயரிய இலக்கு குறித்த 1 கோடியே 90 இலட்சம் குடும்பங்களை சந்திக்கும் "உங்கள் கனவைச் சொல்லுங்கள் என்ற திட்டத்தை கழகத் தலைவர் அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள். கழகத் தலைவரின் திராவிட மாடல் ஆட்சியில் செயல்படுத்தப்பட்டுவரும் சமூக நலத் திட்டங்களால் பயன்பெறாத குடும்பம் என்ற ஒன்று இருக்க முடியுமா? தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பமும் ஏதாவது ஒரு திட்டத்தினால் பயனடைந்து வருகின்றனர். (மணியடிக்கப்பெற்றது) மனசாட்சியுள்ள யாரும் இதனை மறுக்க முடியாது.

### காலை உணவுத் திட்டம்!

இன்றைக்கு தமிழ்நாட்டில் மட்டும் எந்த ஒரு அரசும் செய்திடாத மிகப் புரட்சியை செய்திருக்கிறார்கள். இந்தாண்டு பொங்கல் திருநாளை மக்கள் சிறப்பாக கொண்டாடும் விதமாக 6,936 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, ஒவ்வொரு அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் 3,000 ரூபாய், 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை உள்ளிட்ட பொருட்களை வழங்கியது மட்டுமல்லாமல், இதனால் 2.23 கோடி குடும்பங்கள் பயனடைந்தது. பொங்கலுக்கு வழங்கிய வேட்டியையும், சேலையையும் இளம் தலைமுறையினர் தமிழர் திருநாள் உடையாக மாற்றி Instagram reels ஆக viral ஆக்கியிருக்கிறார்கள்.

இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பள்ளிக் கல்வியில் காலை உணவுத் திட்டம், நான் முதல்வன் திட்டம், கலைஞர் கனவு இல்லம் ஆகிய திராவிட மாடல் அரசின் மூன்று திட்டங்கள் பாணியில் ஓராண்டிற்கு முன்பே பிரிட்டனில் நடந்த தேர்தலில், அந்நாட்டின் தொழிலாளர் கட்சி தேர்தல் வாக்குறுதியாக அளித்து, வெற்றி பெற்றிருப்பதை தினமணி நாளிதழ் குறிப்பிட்டிருக்கிறது. தமிழ் மக்களாகிய நீங்கள் இப்படி ஒரு சிறந்த முதல்வர் கிடைத்ததற்கு பெருமைப்பட வேண்டுமென்றும், தமிழ்நாட்டின் model ஒட்டுமொத்த இந்தியாவிற்கும் உதாரணமாக உள்ளது என நமது முதல்வரை பாராட்டியிருக்கிறார்.

தெலுங்கானா மாநில முதல்வர் ரேவந்த் ரெட்டி அவர்கள். இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலுள்ள செயல்பாடுகளை கவனித்ததாகவும் அதில் ஒட்டுமொத்த செயல் திறனிலும் சிறந்து விளங்கும் மாநிலமாக தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும் India Today இயக்குநர் ராஜ் செங்கப்பா குறிப்பிட்டுள்ளார்.

### 25 இலட்சம் பட்டாக்கள்!

இன்றைக்கு ஏறத்தாழ 25 இலட்சம் பட்டாக்களை தமிழ்நாட்டில் வழங்கி மிகப்பெரும் சாதனை படைத்திருக்கிறது நமது திராவிட மாடல் அரசு. இந்த பட்டாக்களை வழங்குவதற்காக சமீபத்தில் இரண்டு அரசாணைகளை வெளியிட்டிருக்கிறது. ஒன்று அரசாணை எண் 97; மற்றொன்று அரசாணை எண் 205. வெளியிட்டிருக்கக்கூடிய இந்த 2 அரசாணைகளில் அரசாணை எண் 97 belt area ஆக இருப்பதை தளர்த்தி, இன்றைக்கு பட்டாவை வழங்கியிருக்கிறோம். அரசாணை எண் 205ல் rateஐ fix செய்திருக்கிறோம்.

அதாவது ஒரு குறிப்பிட்ட அளவிற்குமேல் செல்கிற போது, அவர்களுக்கு நாம் பணத்தை கட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இவற்றை பொதுமக்கள் வரவேற்கிறார்கள். ஆனால், அதேசமயத்தில் அந்த இடத்தில் பெரும்பகுதியான மக்கள் காலங்காலமாக 40 ஆண்டு காலம், 50 ஆண்டு காலம் இருந்து வரக்கூடியவர்களின் தலைமுறைகள் இந்த திராவிட இயக்கத்தினால் கல்வி அறிவு பெற்ற காரணத்தினால், இன்றைக்கு படித்து அரசு வேலைவாய்ப்புகள் பெற்றிருக்கிற காரணத்தால், அரசாங்கத்தால் வேலை செய்கிறார்கள் என்கிற ஒரே காரணத்திற்காக பட்டாக்கள் வழங்க முடியாத சூழல் இருக்கிறது.

எனவே, அரசாணை எண் 205-ல் குறிப்பிட்டிருக்கக்கூடிய அந்த விதியை தளர்த்தி யாரெல்லாம் பன்னெடுங்காலமாக, original ஆக யார் அங்கு occupancy ஆக இருக்கிறார்களோ அவர்கள் அரசு வேலையில் இல்லை என்பதை உறுதி செய்யப்பட்டு, இப்போது அரசு வேலை யில் இருந்தாலும்கூட எல்லோருக்கும் கொடுப்பது போல் இந்த இலவச பட்டாவைக் கொடுத்து அதற்கு extent ஆக இருக்கக்கூடிய அந்த sq. ft.க்கு பணத்தை பெற்றுக்கொண்டால் மக்கள் மகிழ்ச்சியாக இருப்பார்கள்.

இந்த அரசாணை முழுமையாக சென்னை மாநகராட்சிக்கு மிகப்பெரிய ஒரு பயனை அளிக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல G.O. No. 97ல் Belt areaவினுடைய conditionsஐ relax செய்திருக்கக்கூடிய நம்முடைய அரசு, சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை இரண்டு வகையான நிலங்களாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதில் ஒன்று மாநகராட்சி பொது, இன்னொன்று மாநகராட்சி private என்று இருக்கிறது. மாநகராட்சி பொது என்கின்ற நிலத்தினை பட்டா வழங்குவதில் எந்த ஆட்சேபனையும் இல்லை. இன்றைக்கு பட்டா வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், மாநகராட்சி private என்கின்ற இடத்தை இந்த அரசாணை கட்டுப்படுத்தாது என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள்.

எனவே மாநகராட்சி private என்கிற நிலத்திலும் ஆக்கிரமிப்பு செய்திருக்கக்கூடிய மக்களுக்கு பட்டாக்களை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்றும், நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய (மணியடிக்கப்பெற்றது) முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பிட்டுத் திட்டம்,

### மருத்துவ காப்பீட்டுத் திட்டம்!

நம்முடைய முதலமைச்சர் அவர்களின் விரிவான மருத்துவக் காப்பிட்டுத் திட்டம், இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் 48 என்று தமிழ்நாட்டினுடைய சுகாதாரத் துறை, இதுவரை 545 ஒன்றிய அரசின் விருதுகளை பெற்றிருக்கிறது என்கின்ற ஒரு பெருமை தமிழ்நாட்டிற்கு மட்டும் தான் சேரும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, நம்முடைய தஞ்சை டெல்டா பகுதி வளம் கொழிக்க, கரிகால பெருவளத்தான் காவிரி படுகையில் கல்லணையைக் கட்டினான் என்றால், சென்னை மாநகரின் குடிநீர் தேவையை நிறைவு செய்திடும் வகையில் 342 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோவலம் வடிநிலப்பகுதியில் மாமல்லன் நீர்த்தேக்கத்தினை அமைப்பதற்காக அடிக்கல் நாட்டிய தற்கால கரிகால பெருவளத்தான் நமது முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு உச்சநீதிமன்றம் ஒன்று சொல்லியிருக்கிறது. பொது மக்களின் வாக்குரிமை பறிக்கப்படும் அபாயம் ஏற்பட்டபோது முதல் குரல் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடமிருந்து வெளிப்பட்டது. தமிழ்நாட்டினுடைய மக்கள்தொகை கட்டுப்பாட்டிற்கு எற்றாற்போல் தொகுதியை மறுசீரமைக்கப்படுவதை கண்டித்தும், நமது முதலமைச்சர் அவர்கள் குரல் கொடுத்தார்கள். SIR குறித்து முதலமைச்சர் அவர்கள் பேசியது மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வழக்கும் தொடரப்பட்டது. அந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது நேற்றைக்கு உச்சநீதிமன்றம் சொல்லியிருக்கிறது. நான் இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், முதலமைச்சர் அவர்களுடைய கூற்றை உச்சநீதிமன்றமும் வலு சேர்த்திருக்கிறது என்பதற்காகத்தான் நான் இரண்டு வரிகளை படிக்கிறேன்.

'A special revision may involve serious consequences in the civil rights of a person who is already a voter. So, why should we not expect you', Election Commissionஐ பார்த்து உச்ச நீதிமன்றம் கேட்கிறது, 'Why should we not expect you to have a procedure that is transparent.' வெளிப்படைத்தன்மை இல்லை என்று தலைவர் சொன்னார். அதைத்தான் உச்சநீதிமன்றமும் சொல்லியிருக்கிறது.

### முதலமைச்சர் உழைத்துக் கொண்டே இருக்கிறார்!

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எப்போது தூங்குகிறார் என்பதே தெரியவில்லை. எப்போதும் உழைத்துக்கொண்டேயிருக்கிறார். அவரது உழைப்பால் தமிழ்நாடு உயர்ந்து நிற்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே,

May I conclude my speech with these lines, 'In 2026, the month of May is most important', பேரவைத் தலைவர் அவர்களே, 'In 2026, the month of May is most important. Because, in May they may not come to power. But, in May, our Honourable Chief Minister will continue and Tamil Nadu will succeed; our Honourable Chief Minister will continue and Tamil Nadu will succeed; our Honourable Chief Minister will continue and Tamil Nadu will succeed' என்று சொல்லி வாய்ப்பிற்கு நன்றி பாராட்டி அமைகிறேன்.

இவ்வாறு எழும்பூர் இ.பரந்தாமன் பேசினார்.

## தி.மு.க. அயலக அணி

### மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்ட செயலாளர்/பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. அயலக அணி மாவட்ட மற்றும் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

#### விழுப்புரம் தெற்கு மாவட்டம்

தலைவர் - பி. சிவராமன் வெள்ளையத் தெரு, விளந்தை, திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணைத் தலைவர் - கே. பூபாலன் பால்வாடி தெரு, ஈச்சங்குப்பம், பிரம்மதேசம் அஞ்சல், விழுப்புரம் மாவட்டம்.

அமைப்பாளர் - எ.ஜி.எஸ். கணேசன் மேலத் தெரு, பனையபுரம், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) பி. ஸ்டாலின் யுவராஜ் பீட்டர் நகர், முகையூர், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 2) அ. அமானுல்லாஹ் 32, செட்டேஸ்வரன் கோவில் தெரு, விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம். 3) என். அருளரசன் 1/1, பெரிய அக்ரஹாரத் தெரு, ஏமப்பூர், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 4) சி. ராமலிங்கம் 122, நடுத் தெரு, ஆசாரங்குப்பம். ஆதனூர் அஞ்சல், விழுப்புரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 5) த. தினேஷ்குமார் 2/228, வானியத் தெரு, ஆற்காடு மற்றும் அஞ்சல், திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

#### ஈரோடு வடக்கு மாவட்டம்

தலைவர் - கே.சந்தோஷ்குமார், 435, வடுகபாளையம் புதூர், கோபி. துணைத் தலைவர் - ப.உதயகுமார், 13-2, வடக்கு காந்திபுரம், நம்பியூர்.

அமைப்பாளர் - பி.டி.சுரேஷ் ராஜா, புதுராசாங்குளம், ஆலாம்பாளையம், அந்தியூர்.

துணை அமைப்பாளர்கள் - 1) நா.மகேஸ்வரன், 182/4, குந்துகாலம்பாளையம், பிரம்மதேசம் அஞ்சல், அந்தியூர். 2) வி.டி.எஸ். சுரேஷ், 1ஏ, காமராஜ் வீதி, புதுவளவு, பெரியூர், சத்தி. 3) சி.சசி(எ)கிருஷ்ணன், 13/6, மின்நகர், கோபி. 4) ஏ.எம். முருகன், 277, பவானி மெயின் ரோடு, ஸ்டேட் பேங்க் எதிரில் அந்தியூர். 5) சி.கவின், 2/61ஏ, தொப்பம்பாளையம் அஞ்சல், பவானிசாகர்.

#### தஞ்சை வடக்கு மாவட்டம்

##### கும்பகோணம் மாநகரம்

அமைப்பாளர் - அ. சுலைமான்சேட் 8/198, ஸ்டேட் பேங்க் குடியிருப்பு விரிவாக்கம், கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எம். அஷ்ரப் அலி 2, புது குடியிருப்பு, சுவாமிமலை மெயின் ரோடு, மேலக்காவேரி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 2) ஆர். சவுக்கத்அலி 55, மதகடி தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 3) கா. சுப்பிரமணியன் 11-1, பெரும்பாண்டி மெயின் ரோடு, மேலக்காவேரி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 4) அ.மு. அப்துல் அஜீஸ் 22-23, முஸ்லீம் மெயின் ரோடு, மேலக்காவேரி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 5) எம். சகாபுதீன் 64/1756/1, மெயின் ரோடு, 6வது தெரு, இளங்கோ நகர், கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

#### திருச்சி தெற்கு மாவட்டம்,

##### திருச்சி கிழக்கு மாநகரம்

திருச்சி தெற்கு மாவட்டம், திருச்சி கிழக்கு மாநகர அயலக அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட கே.விஜயகோபால் அவர்களுக்குப் பதிலாக **ஜே.இப்ராம்சா,** (32/4, பாலாஜி அவென்யூ, முதல் கிராஸ், பழைய கரூர் சாலை, மேலசிந்தாமணி, திருச்சி-2) அவர்கள் திருச்சி கிழக்கு மாநகர அயலக அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

#### கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம்

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட அயலக அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட ராஜா அவர்கள் ஒசூர் மாநகர தெற்கு பகுதி பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்கு பதிலாக **சி. சீனிவாசமூர்த்தி,** (2/54, பேளகொண்டப்பள்ளி கிராமம் மற்றும் அஞ்சல், தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி) அவர்கள் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட அயலக அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.


"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 22-01-2026.

**எம்.எம்.அப்துல்லா**
செயலாளர்
தி.மு.க. அயலக அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.ராமச்சந்திரன்

**சனவரி 24 (2011)**



கழகம் துவங்கிய காலம் முதல் கழகப் பணியாற்றியவர்.

வடபெரும்பாக்கம் கிளைக் கழக அவைத் தலைவராக இருபது ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.

சாலைப் பணியாளர்கள் சங்க கமிட்டி உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.


கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கி.வே. செந்தில்குமார்

**சனவரி 24 (2010)**



இளம்பிராயத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, இரண்டு முறை கும்மிடிப்பூண்டி ஒன்றியக் கழகச் செயலாளராகப் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு விற்பனைச் சங்க துணைத் தலைவராகவும், காஞ்சிபுரம் – திருவள்ளூர் மாவட்ட விற்பனைக் குழு இயக்குநராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக ஜெ. அரசால் தலைவர் கலைஞர் கைது செய்யப்பட்ட போது, மறியலில் ஈடுபட்டதற்காக இரண்டு மாதத்திற்கும் மேலாக சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**